ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2075/24 - 2018 ජූනි මස 13 වැනි බදාදා - 2018.06.13
*2075/24 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இலக்கம் 11/2018*

*திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 2018, சனவரி மாதம் 18 ஆம் திகதிய 2054/41 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 03/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் அட்டவணையில் இல. 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளு தவறணைகளில் விற்பனை நேரங்கள் 2018, யூன் மாதம் 13 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறதென இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, யூன் 13.*

**அட்டவணை**

| *(நிரல் I)* | | *(நிரல் II)* |
|---|---|---|
| | **உரிம வகை** | **திறக்கப்படும் நேரங்கள்** |
| (i) | *கள்ளுத் தவறணை* | *மு.ப. 11.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை மற்றும் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரை* |
| (ii) | *கள்ளுத் தவறணை (கூட்டுறவு முறையின் கீழ் செயற்படும்)* | *மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 9.00 மணி வரை* |

*2. பொருட்கோடல் : "கூட்டுறவு முறையின் கீழ்" என்பது மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கொத்தணிகள் என கருத்திற்கொள்ளப்படுகிறது.*

*06 - 1005*

1A - PG 4080 - 582 (2018/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*